# அலை

இலக்கிய கலை விமர்சன இதழ்

2

விலை 2/-

August September 81


## மூன்று தாலாட்டுகள்!

துப்பாக்கிக் குண்டின்
ஓசைகள்
உன்துயிலைக் கலைக்கும்
எனினும் அது
உனக்குப் பழக்கம்
குப்பி விளக்கு
குறைத்தூக்கம் கொள்கிறது
உன் தந்தை -
உன் எதிர்காலக்
கற்பனையில் இதயம்தோய
துப்பாக்கி எந்தி - ஏதோ
ஓர்
எல்லையில் நிற்கிறார்
கவலை ஏன்
கலைந்த துயிலால்
அனுங்குதல் வேண்டாம்
கண்ணே உறங்கு
கண்ணே உறங்கு

வியட்னாமிய தாலாட்டு

இந்த இருள்
எங்கள் குரல்களை
எதிரொலிக்கவில்லை
-ஆனாலும்
உன் அழுகுரல் என்
இதயத்தில் எதிரொலிக்கிறது
மௌனம் சுகமானது
மௌனத்துயில்
விரிப்பின் ஒலியில்
உன்குரல் - கண்ணே
எங்கள் குரலாகும்
அதுவரை
மௌனம் சுகமானது
மௌனத்துயில்
மௌனத்துயில்

ஆபிரிக்கத்தாலாட்டு

அழாதே... கண்ணே
கண்களை அழுத்தும்
கனவுகள்
கண்ணீரில் கரைந்துவிடும்
நட்சத்திரங்கள்
கண் சிமிட்டிச் சிரிக்கும்
உன்முகம்
சிணுங்க
நட்சத்திரங்கள் உதிர்ந்துவிடும்.

பௌர்ணமி உலகின்
சௌந்தர் பலங்கள்
நீ விளையாட
திறந்தே இடக்கிறது ...
ஓய்வின் பின் விழிக்க
உறங்கிடுவாய் கண்ணே

பிலிப்பைன்ஸ் தாலாட்டு

மௌனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடப் பொருட்கள் ✱ C. I. C. பெயின்ற் வகைகள்

✱ S - Lon பைப் வகைகள், இணைப்புக்கள்

✱ விவசாய இராசயனப் பொருட்கள்

✱ இரும்பு - தகர - கல்வனைஸ்ட் சிற்வகைகள்

✱ கல்வனைஸ்ட் பைப் வகைகள்

✱ அரிசி ஆலை இயந்திரங்கள் - உதிரிப் பாகங்கள்

அனைத்தையும்.........

யாழ் நகரில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

# கல்கி சன்ஸ்

147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7711 தந்தி: ஸ்ரீராம்



ஈழத்து இல்லத்தரசிகளின் அன்றாட வாழ்வுடன்
இணைந்துள்ள மில்க்வைற் தயாரிப்புகள்!

✱ பிரகாசமான சலவைக்கு மில்க்வைற் நீல சோப்

✱ துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடர்

✱ சிக்கனமான சலவைக்கு மில்க்வைற் பார்சோப்



# மில்க்வைற் தொழிற்சாலை

தபாற் பெட்டி எண்: 77 யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேகம்

உலகினைப் புரட்டி ஓர் உயர்யுகம் காட்டிட
எழுதுகோல் இங்கோர் நெம்புகோல் ஆகட்டுமே!

✳ கலை இலக்கிய விமர்சன இதழ் ✳

மழை 1 | ஆகஸ்ட் 81 | துளி 2



ஆசிரியர்:
கணபதி கணேசன்

ஆசிரியர் குழு:
அன்புநெஞ்சன்
தமிழ்ப்பிரியன்

முகவரி:
234/7, மானிப்பாய் வீதி,
புனித செபஸ்தியன் ஒழுங்கை,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.


( இதில் வெளியாகும் எந்தவொரு படைப்பின் கருத்துக்களுக்கும் அதன் படைப்பாளர்களே காரணர்கள். சில கருத்துக்கள் எமக்கு உடன்பாடற்றவை ஆயினும் அதன் அவசியம் கருதியே பிரசுரிக்கப்படுகின்றது. )

## முடிவில்லாப் பயணம்...!

இலக்கிய மழை பொழியவில்லை - மேகம்
இலக்கிய நண்பர்களைத் தேடிக் கொண்டது
ஆயிரக் கணக்கில் இது விற்கவில்லை
நூற்றுக் கணக்கான கடிதங்கள்
இங்கே குவிந்துள்ளன
மேகத்தின் வெற்றிக்கு
இதுவே சான்று.

பாய் விரித்துப் படுத்திருக்கும்
பாஸிஷத்தின் -
கால்பிடித்து வாழும் நாட்டில்
நோய் பிடித்த இலக்கியத்தின்
சீழ்வடிந்து மாளும்
சீர்பெற்ற இலக்கியத்தின்
சீர்மைக்கு உழைக்க
ஒன்றுபட்டுத் தோள் கொடுக்கவாரீர்.

இலக்கியப் பயணம் என்பது - பல
இதயங்களின் சங்கமத்தில் சாத்தியம்
ஒன்றுபட்டுழைக்கும் - ஒன்றையே
சிந்திக்கும் ஒரு கூட்டத்தால்
மட்டும்தான் இதுசாத்தியம்
எனவே - தங்கள்
ஆவேசங்களைக் களைந்த
ஆதரவான ஆலோசனைகள்
ஒரு இலக்கியச் செழுமைக்காக
ஒன்றுபட்ட எங்களை
உரமூட்டி ஒன்றுபடுத்தும். ✳


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடுக்கண் வருங்கால்...!

★ கணேசவேல் ★

விடுதலைக்குப் போராடும் மக்கட் கெல்லாம்
வெறியர்களால் இடுக்கண் வரும்! மூடத்
தனத்தை
அடிகொடுத்து விழுத்திவிட முனைவோர்க்
கெல்லாம்
அலையலையாய் இடுக்கண் வரும்! நாட்டின்
இனத்தின்
விடிவிற்காய் உழைக்கின்ற விறலோர்க்
கெல்லாம்
வீணர்களால் இடுக்கண் வரும்! ஆய்ந்து
பார்த்தால்
முடிவினிலே வெல்லுவது மெய்மை உண்மை
முழுமனித குலத்தினதும் கதையே இதுதான்.

இரணியன்போல் ஸார் ஆள ரஷ்ய மக்கள்
இடுக்கணொரு கோடியினுலிறந்தார் கெட்டார்
சிறுபான்மை இனங்களுக்கும் உழைப்போர்
நமக்கும்
சிறைக்கூடமாய் ரஷ்யா சிவந்த நாளில்
அரிமாவைப் போல்எழுந்த லெனின் இயக்கம்
அடக்குமுறை தனைஎதிர்த்தே வென்றதன்றே
புறம்படைத்த தமிழ்நாட்டு மக்கள் இந்தப்
போதனைகள் தம்வழியில் பேணல் வேண்டும்.

யேசுபிரான் சிலுவையிலே அறையப்பட்டார்
சோக்ரறீஸ் விஷக்கோப்பை பரிசாய்ப்
பெற்றார்
வீசுபுகழ் நபியண்ணல் துரத்தப் பட்டார்
கால்ஸ்மார்க்சோ நாடுபல கடத்தப்பட்டார்
தேசபிதா காந்தியினை வெறியன் சுட்டான்
தேசங்கள் பலவினினும் காலந்தோறும்
மாசகற்ற வந்தார்க்கு இடுக்கண் வந்து
மறைந்தாலும் அவர்நாமம் மறந்துண்டோ?

அடுத்துவரும் துன்பத்தை அடக்கும் ஆற்றல்
அளித்திடலால் நகுகவெனக் குறளார்
சொன்னார்
இடுக்கண்வரும் போதுசிலர் இடிந்தே போவர்
இன்னுமொரு சிலர் தமையே முடித்துச்
சாவார்
வடுக்களினைச் சுமந்தேதம் வழியைத்
தொடரும்
வைரமனம் படைத்தோரே வரலாருவார்
இடுக்கணதை எதிர்த்துப் போராடும் மக்கள்
இறைமையோடு விடுதலையும் எய்தக் காண்பர்




பெண்டகனின் குண்டுகளும் அமெரிக்காவின்
புதுப்புதிய விமானங்களும் படைகள் தாமும்
சண்டையிட்டு அணியணியாய்த் தாக்கும்
போதும்
சரணடையா வியற்நாமின் சனங்கள் நேற்று
கொண்டமன உறுதியினுலிடுக்கண் தம்மைக்
கொன்றொழித்துப் புதுவாழ்வை கொண்டார்
அன்றோ?
இன்றெமது மக்களையே இடுக்கண் தாக்கும்
இவர்கள்தம் மனவுறுதி அதனைப் போக்கும்.
எல்லடியில் இடுக்கண்தான் தோன்றும்
என்றே
எவராலும் கணிப்பிடுதல் அரிது கண்டீர்
இங்கெமது யாழ்ப்பாண விவசாயிக்கு
இறக்குமதி மிளகாயும் இடுக்கண் தானே
வெங்காயம் உரிக்கையிலே கண்ணீர் ஓடும்
வெங்காயம் விலையிறங்க இடுக்கண் கூடும்
அல்லற்பட் டாற்றாது அழுத கண்ணீர்
செல்வத்தைத் தேய்க்குமென்று குறளார்
சொன்னார். ★

● நயினையில் நடைபெற்ற 21-வது திரு
மறைக் கழகக் கவியரங்கக் கவிதையின்
சில பகுதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பாவப்பட்ப ஜென்மங்கள்

★ சாரதா சண்முகநாதன் ★

வெற்று வானத்தின் வெயில் கொதிப்பைக் கூடப் பொருட்படுத்தாது தலைப்புச் சீலையை இழுத்து முட்டாக்குப் போட்டபடி பாக்கியம் வீட்டுப் படலையை அவசர அவசரமாய்த் திறந்தாள் முத்தாச்சி. சண்டையும் கூக்குரலுமாய்... பாக்கியம் வீடு இரண்டுபட்டுக் கொண்டிருந்தது. இந்த விடுப்பு விண்ணுணங்களைப் பார்ப்பதென்முல் அவவுக்குச்சரியான புழுகம். எங்கே ஆவது யாற்றேனும் குரல் சற்ருேங்கிக் கேட்டால் போதும் உடனே தலையை நீட்டி... ஊர்முழுக்கக் கொண்டோடாவிட்டால் அன்றைய பொழுது அவளுக்கு நல்லதாகவே விடியாது.

''என்னடி பெட்டைகள்; ஏன் சண்டை பிடிக்கிறியள் அண்டை அயலிலையும் குமர்களிருக்குத்தானே. ஒரு சத்தம் சாவடி கேட்குதா... இதுகளைப் பாத்திட்டுத்தான் அவன் பாக்கியமும் இருந்தா விசர் பிடிச்சிடுமென சாணிக் கடகத்தைத் தூக்கிக் கொண்டு தலையடிக்க வெளிக்கிடுறது.''

முத்தாச்சி திடீரென்று வந்து அப்படிச் சொல்லிக் கொண்டு நின்றபோது ஆனந்தியும், சுசீலாவும் ''சே... இந்தவீட்டில இருக்கிறதைவிட அவவைப்போலக் காட்டுப்பக்கம் போனுல் கூட மனிசருக்கு நின்மதியாயிருக்கும்'' கழுத்தை ஒரு நொடிப்பு நொடித்து விட்டுக் குசினிப் பக்கம் நுழைகிருர்கள்.

முத்தாச்சி ரஞ்சியைப் பார்க்கிருள். இரண்டு நாயனங்களுமிசைக்க ஆரம்பித்தவுடன் இவள் மத்தளமாயிருந்து இருபுறமும் அடிபட விரும்பாமல் திண்ணைக் கம்பில் சாய்ந்தபடி அழுதுகொண்டிருந்தாள்.

''உன்னையெல்லே சொல்றஞன் நாறுதரம்...அதுகளோட வாய் குடுக்காதையென்று அக்காவென்று மட்டு மரியாதை இல்லாமலதுகள் பேசுறபோது, நீயேனதுகளோத திருந்தப்போவான் பேசாமல் கிடவன்'

'' நான் என்னத்தைச் சொன்னஞனே ... இத்தனை வயதாப் போயிற்று ஒழுங்காத் தலையைச்சீவி, உடுப்பைத் தோய்ச்சுப்போட்டிட்டு, உள்ள பொருளை செம்மைப் படுத்தி வையென்முல்... ஓ! இவ்வளவு காலமும் எங்கோ கிடந்து அடிவினை செய்து போட்டிப்ப எங்களைத் திருத்தவந்திட்டாவாம் என்று ... அதுகளைப் பார்த்து கீழையுள்ளதுகளுமல்லே எதிர்த்துப் பேச வெளிக்கிடுதுகள்,'' — வேதனை பந்தாக உருண்டு அவள் நெஞ்சுக்குழியை அடைக்கிறது.

''ம்... எல்லாம் உன்ர தலைவிதி. தன்ர தங்கச்சி கிடந்து கரையிரு என்று உன்ரயப்பன் உன்னையங்கை வயிறு வளர்க்க விட்டான். கடைசியில இந்தக் கோலத்தில உன்னைத் தள்ளி விட்டுப் போயிற்றினம். இதுகளுக்கும் சகோதரம் எண்ட பாசம் அத்துப் போச்சு ''...................... ஏதோ சுவரஸ்யத்தை எதிர்பார்த்து வந்த முத்தாச்சி, எல்லோரும் ''கப்சிப்'' என்று தங்கட தங்கட வேலையைப் பார்க்கப்போனதால... திண்ணையிலிருந்த வெற்றிலைத் தட்டத்தை இழுத்து ஒரு வாய் போட்டுக் கொண்டு வெளிக்கிடுகிருள் வரும் போதிருந்த விறுவிறுப்பில்லாமல.

ரஞ்சி அந்தக் கப்படியிலே குந்திக் கொண்டிருக்கிருள். முத்தத்தில் நின்றிருந்த சேவல் ஊர்ந்தோடும் மண்புழுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுக்கென்று கொத்தி... அது துடிதுடித்துச் சுருண்டதும் மறுபடி லபக்கெனக் கொத்தி விழுங்குகிறது. அந்த மண்புழுபோல் அவள் நெஞ்சத்திலுமொரு துடிதுடிப்பு ''அங்க உன்னை வயிறு வளர்க்க விட்டபடியால்தான் இந்தத் தலைவிதி'' இந்தக் கேள்வி அன்று அவள் மனதில் பலமுறை மோதி............ ரஞ்சி இரண்டு கைகளாலும் மாவைப் பிசைகிருள். தன் பலங்கொண்ட மட்டும் கைகளை இறுக்கிக் குத்துகிருள். அப்புறம் பிதுக்கி அள்ளி... சப்பையாகத் தட்டி... தோசைக்கல்லில் வாட்டி ஒவ்வொருவருக்கும் இரவு உணவைப் பரிமாறும்போது, தன்னை ஒரு மூன்ருந்தர ஆளாய் மதித்து அவர்கள் தங்களுக்குள் கதைப்பதும்... சிரிப்பதும் இந்தச் சூழ்நிலைக்குப் பெ ருத்தமில்லாததவை. இந்தக் குடும்பத்தில் இணையமுடியாதவள் நான், என்று தன் மேலேயே பட்சாதாபம் ஏற்பட்டது.ஏன் இப்படி என்னை விலத்தித் தள்ளுதுகள்? இதற்கு யார் காரணம்? என் தலைவிதி இப்படித் திசை மாறியதற்கு யாரைச்சபிப்பேன்? இந்த முத்தாய்ச்சி சொல்லிவிட்டுப் போய்விட்டாள். என்னை வயிறு வளர்க்க அனுப்பியதற்கு அவளும் ஒரு காரணிதானே.

இப்போதும் அந்த நிகழ்ச்சி, ரஞ்சிக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. பத்து வயதுச் சிறுமியாய் இடுப்பில் பாவாடை மேலே வெறும் மேலுடன் அயித்தாம்புலத்து மணலில் சிறு வீடு கட்டி, ஆவரசம் பத்தைகள் எல்லாம் ஒளிச்சுப் புடிச்சு விளையாடி, படலையைத் திறந்தால் முன்னுக்குள்ள வெறுந் துண்டுக்குள் ஓங்கிப் பரந்த புளிய மரத்தில் ஊஞ்சல்கட்டி அதன் கீழ் எட்டுகோடு பாய்ந்து......

கனத்துப்போய்க் கிடக்கும் அவள் இதயத்துள் அந்த சிறுகால நினைவுகள் உட்புகுந்து அந்தரங்கத்தை உலுப்பி ஆட்டுகின்றன. தூக்கம் வராமல் படுகையில் புரள்கிருள். அப்பிடி ஒரு நாள் எட்டுக் கோடு பாயும் அவள் வீட்டுப் படலையில் படகு போன்ற கார் ஒன்று வந்து நிற்கிறது. சில்லுத் துண்டுகளைத் தூக்கியெறிந்துவிட்டு எல்லோரும் காரை அதிசயத்துடன் மொய்க்கின்றனர். வந்தவர் பாக்கியத்தின்ர புருசன் வேலுப்பிள்ளையற்ற ஒன்றுவிட்ட சகோதரி புருசன் சிதம்பரி.

தங்கச்சி புருசனின் அதிசய வரவு...... சுந்தற்ற கொட்டிலுக்க பூந்திற்று, நாலு காலில வந்த வேலுப்பிள்ளையருக்கு இனிப்புக் கள்ளாகிறது. ஓட்டைக் கதிரையைத் தூசி தட்டி இழுத்து வைக்கிருள் பாக்கியம். அவளின்ர ஏழும் மூலைக்சொன்ருய் பூந்து கொள்கிறது. அவைக்கு பயம். மற்றதுகளுக்கு ஆன உடுப்பில்லாக் குறை. அதுகளை வெளிய விடாமல் பாக்கியத்தின்ர மூத்த பெண் குசினிக்குள் அடைக்கிருள். ரஞ்சிக்கு மட்டும் சற்றுத் துணிச்சல் வெத்திலைத் தட்டத்தை இழுத்து வைக்கிருள். கரிக்கோப்பியை கொண்டுபோய் கொடுக்கிருள். சிதம்பரியின் பார்வை அவள் மேல்ப் படுகிறது. செம்பருத்திப் பூப்போல பத்து வயதில் அவள் அழகாய்த் தெரிகிருள். அவர் மனம் ஏதோ கணக்குப் போடுகிறது.

'என்ன மச்சான் திடீர்ப் பயணம்-எப்ப கொழும்பால வந்தது' - வேலுப்பிள்ளையர் கேட்கிருர்.

'நான் யாழ்ப்பாணம் வந்து ஒரு கிழமையாகப் போகிறது. இங்க ஊரில் உன்னட்டத்தான் ஒரு விசயமாக வந்தனுன். அதுதான்' தயங்குகிருர்.

அவரின் தயக்கம்... வேலுப்பிள்ளையருக்குத் தன்னையும் ஒரு பெரியமனுஷனுய் நினைத்து உதவி கேட்குமளவிற்கு வந்துவிட்டதேயென எதையும் கொடுக்கும் வள்ளல் நிலையில் நின்ருர்.

ஆனலவர் கேட்டது? பாக்கியம் அயர்ந்து போனுள். ரஞ்சிபயந்தோடிப்போய் தாயின் சீலைக்குள் புகுந்து கொள்கிருள். அந்தச்சின்ன மனதின் தவிப்பை தாயுள்ளத்தாலும் அறிந்து கொள்ள முடிகிறது. அழுக்கு மணம் வீசும் தாயின் அந்தச் சீலையில்கூட ஒரு சுகந்தத்தை அனுபவிப்பவள் போல் அதை இழுத்திழுத்து தன்னுடலைச் சுற்றிக்கொள்ள... எங்கேயதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள பொத்தல்கள் எல்லாம் வந்தவர் கண்ணுக்குத் தெரிந்து விடுமோவென அஞ்சிய பாக்கியம் அவனைக் கையால் தள்ளி விலத்தி விடுகிறாள். அந்தத் தள்ளல் அவனை அந்தக் குடும்பத்தில் இருந்தே விலத்தி விடுமன்று அவள் கண்டாளா?

'அதுக்கென்ன மச்சான் பிறத்தியார் வீட்டுக்கே அனுப்புறன்... ஒண்டுக்க ஒண்டு... இந்த உதவியைச் செய்யாட்டி பிறகு மனுசரென்று ஏன் இருப்பான்? இவள் தங்கச்சி திலகமும் சரியான நோய்வாய்ப் பட்டிற்றாள்.' சிதம்பரியார் கையுக்குள் அமர்த்திய காசு வேலுப்பிள்ளையற்றை பாசஊற்றை அடைத்து விடுகிறது.

தூபம் போடும் கணவனை இடைமறித்து 'அவள் என்னை விட்டிற்று ஒரு நிமிசமும் இருக்க மாட்டா அண்ணை. குட்டி போட்ட பூனை மாதிரி புல்லுக் காட்டுக்குக் கூட தேடி வந்திடுவாள். அதோட மூத்தது இரண்டும் குமரான பிறகு இவள்தான் எனக்குக் கடை கண்ணிக்கோ, நல்ல தண்ணி அள்ளவோ கையுக்க நிற்கிறவள்.' அந்தத் தாயின் பேச்சு அங்கே எடுபடவில்லை. எதைத்தான் அவன் கேட்டான். தாலி கட்டினபோது கூட வேலுப்பிள்ளை குடித்து இருந்தான் என்பதை சூடான அவன் மூச்சு பாக்கியத்தின் முகத்தில் பட்டபோது வீசிய மணத்தை உணர்ந்து திடுக்கிட்டாள். குடியைக் குறைத்துக்கொள்ளச் சொல்லி எவ்வளவோ... கெஞ்சினாள். 'உன்வீட்டுப் பணத்தையோடி அழிக்கிறன்.' என்ற தாரகமந்திரம் தன்னையல்ல இந்தச் சமுதாயத்தையே அவமானப் படுத்துவது போல அவளுக்கிருந்தது. போதாக்குறைக்கு இந்த முத்தச்சியும், பக்கத்திலுள்ள இனசனங்களும் 'இந்த ஏழோட இனிமேல் உனக்கு எட்டாகப்போகுது பாக்கியம், இங்க கிடந்து வாய்க்கும் வயித்துக்கும் இடிபடாம எங்கயாவது அதின்ர தலையெழுத்தாவது நல்லா இருக்கட்டும் விடன்.' சுருதி சேராத ராகங்கள் மாதிரி உச்சஸ்தாயியில் எல்லோரும் கூறினர்கள். தாய்ப் பாசத்தை மெழுகாக உருக்கிக்கொண்டு தன்னாலிருக்க முடியுமா? வெறிச்சிட்ட மனத்துடன் அவள் நிற்க அழுத கண்ணும் வீங்கிய முகமுமாக... படலையைத் தாண்டி... புளிய மரஒழுங்கையை கடந்து ... பெரியவீதியால் காரிலவள் பயணம் தொடர்கிறது.

காலைப் பறவையின் சிறகடிப்பில் சிலிர்த்து விழும் பனித்துளி போல் நாட்களும் சிதறி விழுந்தன.

இன்று பதினான்கு வருஷங்கள் — பாண்டவர்கள் நாடு நகரை இழந்து அஞ்ஞான வாசம் செய்து மீண்டும் அத்தினாபுரிக்குத் திரும்பியது போல இவளும் இத்தனை வருஷங்களின் பின் அயித்தாம்புலத்து மண்ணுக்கே வந்துவிட்டாள். ஆனால் அவளுக்குக் கிடைத்தது...! அவள் அங்கு செய்த அடிமை ஊழியத்துக்கு ஒரு பரப்பு மண் தானும் இல்லாத — ஒரு பவுணில் ஒரு பொட்டுக்கூட தட்டிப் போட முடியாத அனாதைத் தன்மை...!

கார் புகையைக் கிளப்பிக்கொண்டு போகிறது. களி மணலில் வெட்டவெளியில் கோடு கிழித்தபடி தூரத்தே போய் புள்ளியாய் மறைந்த பிறகும் ரஞ்சியின் தீட்சண்யமான பார்வை வந்த திக்கைவிட்டு அகல மறுக்கிறது.

அவள் வாழ்ந்த சூழ்நிலையில் முற்றும் மாறான குடியிருப்புப் பகுதிகளில் வாழநேரிடும்போது ஊமைக் கனவாய்... மௌன ராகமாய் எல்லாமே அடங்கி விடுகின்றது. முதல் மூன்று வருஷமும் படிக்கிறன் என்று அவளும் படிப்பிக்கிறன் என்று அவர்களும் பள்ளிக்கு விட்டனர். அடுத்த வருஷம் பெரிய மனுஷிப் பட்டம் பெற்றதும் அதற்கும் முற்றுப்புள்ளி போட்டான் சிதம்பரியரின் மனுஷி. 'அவளுக்கு இனியென்னத்துக் கெப்பா படிப்பு? விஷயம் அறிந்த பாக்கியம் முட்டையும் நல்லெண்ணெயும் தேடி ஊர் நெல்லும் குத்தி ஒரு யாத்திரையாய் மகளைப் பார்க்க வந்தாள். 'நாலு வருஷமாய்ப் போயிற்று அவளின்ர முகத்தைப் பார்த்து. இனி அவளைக் கூட்டிக்கொண்டு வந்திடவேணும்.' — அந்த நினைப்பு அவளைக் காணும் வரைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றலர்ந்த ரோஜாவின் மலர்ச்சியில் அந்த உடல் மினுமினுப்பில் குச்சி குச்சியாய் உலர்ந்து கிடக்கும் தன் மற்றப் பிள்ளைகளை நினைத்துப் பார்த்தவள் தன் பாசத்திற்கு முத்திரை போட்டு விடுகின்றாள். தாயைக் கண்ட ரஞ்சியால் ஓடிப்போய் ஒட்டிக்கொள்ள முடியவில்லை. ஏதோ ஒரு ஒட்டுறவற்ற தயக்கம்... காலக் காற்றில் பாசப் பசுமைகள் உலர்ந்து... இயல்பாக ஒட்ட முடியாதபடி பிஞ்சு மனத்தில் ஏற்பட்ட அந்தத் தாக்கம்! தாய்மனம் அதனை வெட்கம் என எடுத்துக் கொள்கிறது.

அடுத்து வந்த மூன்று வருஷங்களால் சிதம்பரி மாமாவின் மகளுக்கு அமெரிக்காவில் உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளையைப் பேசி முடித்து வைத்தபோது... 'நான் இல்லாத குறையை நீதான் ரஞ்சி ஈடு செய்ய வேணும் அம்மாவுக்கு. நான் வருகிறபோது உனக்குக் கட்டாயம் ஏதும் வேண்டிக்கொண்டு வருவன்' விமலா இப்படிச் சொல்லிவிட்டுச் சென்றபோது ஒரு கணம் தன்னிலை மறந்தவள் ரஞ்சி.

'இனியென்ன சிதம்பரியற்ற பெடிச்குத்தானே பெடிச்சியை வீட்டோட வைச்சுருக்கிறார். உண்மையில அவள் சரியான அதிர்ஸ்டக்காரி. கிடக்கிற காணி கரம்பை, கொழும்புக் கடை எல்லாம் மகனுக்குத்தானும்' ஊரார் வெறும் வாயைப் போட்டுச் சப்பினர். ஆனால் அதில் உண்மை இருக்கென்றுதான் பாக்கியம் நம்பினாள். ஏன் ரஞ்சியின் மனம்கூட இதழ் பிரித்து மலரத் தொடங்கியது.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் அவன் விடுமுறைக்கு வரும்போது அவளை அடிக்கடி பார்க்கும் பார்வையில், சிரிப்பில் மறைமுகமான அந்தப் பார்வையில் அவள் மனம் தித்திப்பில் ஆழ்ந்துபோகும்.

ஒருநாள் அவன் யாருமறியாமல் அணைத்த அந்தக் கணநேரச் சிலிர்ப்பில்... அவளும் பல கனவுகளைக் கண்டாள். காத்திருந்தாள். முடிவில் அவன் யாரோ ஒரு பணக்காரன் வீட்டு மாப்பிள்ளையாய்ப் போனபிறகு அவளது உணர்ச்சிகள் எல்லாம் துடிப்பே இல்லாது மழுங்கிப் போயிற்று.

பிள்ளைகள் இரண்டும் வாழ்ந்துவிட்ட நிம்மதியில் மாமியும் போனபிறகு... வீட்டிலும் வெறுமை; உள்ளத்திலும் வெறுமை மாமா ஓடிஓடிச் சம்பாதித்தார். இனியாருக்கு? எனக்காகத்தானே?

மழுங்கிவிட்ட கனவு சற்றுக் கூர்மை பெறத் தொடங்கியது' தன்னை வாழவைப்பார் எனக் கனவு கண்டாள். பதினன்கு வருட வாழ்க்கை வாழ்ந்துவிட்ட நிலையில் மனிதாபிமான உணர்வில் எங்காவது ஒரு மாப்பிள்ளையைத் தேடி வந்து... நான் செய்த ஊழியத்துக்கு...!

'அதில்தான் ஒரு சிக்கல் இருக்கு ரஞ்சி, உன்ர அக்காமார் இரண்டு பேரும் இருக்கேக்கை உனக்கு எப்படிச் செய்து வைக்கிறது. உலகம் சிரிக்கும். அவர்களுக்கு முடியட்டும்' என்பார்.

பெரியக்கா ஏழில செவ்வாய்க்காரி, ஏறுதபடியெல்லாம் ஏறி ஒருவழியாய் இயல்புக்குத் தகுந்த ஒரு கடைப் பொடியனைச் செய்து வைத்தபோது... இரண்டாவது அக்காவுக்கு எதுவுமற்ற பொருளாதாரப் பிரச்சனை. கடைசியில் அவள் ஒரு சமக்காரப் பொடியனோடு ஓடிவிட்டாள் என்ற செய்தியைக் கேட்ட சிதம்பரி குதித்தார்.

ரஞ்சி உள்ளூர மகிழ்வடைந்தாள். ஓடாவிட்டால் ஓடாகத் தேயவேண்டியது தான். அவள் மனமும் இந்தச் சிறைக்குள் இருந்து தப்பியோடத்தானே நினைக்கிறது.

ஆனல் சிதம்பரி நொண்டிக் காரணத்தைக் கற்பித்து காலத்தை நீட்டிக்கொண்டே போகிறார். அவளது யௌவனம் அவரை அசைக்கிறது. ஆள நினைக்கிறது. அந்த வேட்டையாடலுக்கு மானகப் பதுங்காமல் புலியாகப் பாய்ந்து பிறந்த ஊருக்கு அவள் வந்தபோது 'விசர்ப் பெட்டை' என ஊர் சிரிக்கிறது.

'இவ்வளவு காலமும் இருந்தவ அந்த மனுசனோட நல்லதனமாய் நடந்து வேண்டுறத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிக் கொண்டு வராமல் வீசின கையும் வெறுங்கழுத்துமாய் வந்திருக்கிறயே... இங் கேயென்ன கொட்டியா கிடக்கு—' வேலுப் பிள்ளையர் சோழங்கொட்டை போல் பொ ரிகிறர்.

வீட்டில் அன்று பார்த்த அதே வெறுமை அதே கோலம். ஆனல் காலவளர்ச்சியில்... தங்கைகள் நால்வரும் குமர்களாகி வெறுங் கனவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மக் கொடுமை! இவர்களோடு தானுமொரு சுமை யாய்... இணைய மறுக்கும் கோலக் கோடுகள் போல் தங்கைகள் அவளை விலத்தி வைக்க... அந்த நீண்ட இடைவெளியால்... ஓ! நான்

✳

# சுகம்

பெண்கள் தங்கள்
அழகை இழந்து
பெருஞ்சுமை
சுமக்க வேண்டும்
என்று தெரிந்தும்,
சுகங்காண —
விளைவது எதனல்?
சுமையும் ஒரு
சுகம் என்பதினலா!?

● வக்ரதுண்டர்

...த்தனை வஞ்சிக்கப்பட்டு விட்டேன். ஏமாற் றங்கள் பிறர் அறியாமல் தலையணையை நனை ய வைக்கிறது. இந்த ஆறுமாத காலத்தில்... ஒட்டியகன்னமும் உலர்ந்த குச்சிக்கரங்களு மாய்...

வெளிவிறாந்தையில் வேலுப்பிள்ளையருக்குத் தூக்கமில்லை. புரண்டு படுப்பது அவள் காது களுள் விழுகிறது. பின்காவடிச் சரசரப்பு - பகலெல்லாம் பரயர் வீட்டுத் தோட்டத்தில் நின்று அடித்துக் கொடுத்ததில... ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தவளை உலுப்பு கிறர். இணங்க மறுக்கும் பாக்கியத்தினது முணுமுணுப்பு.

ரஞ்சி மெல்ல விழித்து இருளில் மூலைக் கொன்றய் முடங்கிக் கிடக்கும் உடன்பிறப் புகளைப் பார்க்கிறள். நாங்கள் மலடுகளல்ல என்று சமூகத்திற்கு காட்டு முகமாக உணர்ச் சிக் கும்பல்களில் முளைத்த கொடிகளாய்... அந்தக் கொடிகளே கொழு கொம்பில்லாமல் தவிக்கும் போது... மீண்டும் மீண்டும் புது முளைவிட்டுக் கொண்டிருந்தால்...

சே... என்ன ஜென்மங்கள் நாம், அவ ளுக்குத் தன்மீதல்ல, தன் பெற்றேர்மீதல்ல இந்தச் சமுதாயத்தின் மீதே காறித்துப்ப வேண்டும் போல் இருக்கிறது. திசை காட்ட வேண்டியவர்களே வழிமாறினல்? ஓ! இந்தச் சமுதாயத்தில் இன்னும் எத்தனை குமர்களின் தலைவிதிகள் காம்பிலே கருகும் மலர்களாகிப் போகுமோ? ★

# சமமா?

சமதர்மத்திற்குச் சார்பான கருத்தரங்கில்
பிரமுகர் பிறநாட்டின்
பெருமை தவழ்கின்ற பேர்
கொண்ட 'பொலியஸ்டர்'
புதுமையெழில் திகழ
எதிலும் சமமது கிடைக்க வேண்டும்
அகிலமெல்லாம் 'அந்தநெறி'
தழைக்க வேண்டும் இந்நிலை
எங்கும் ஓங்க இன்று நாம்
உறுதி செய்வோம் என்று
முழங்கினர்; இதைக்கேட்டு
எட்டநின்று கைதட்டும்
ஏழையவன் வெறுமுடலோ
இரவுக் குளிர் தாங்காது
இடையிடையே உதறியது!

★ நயனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக்குள்...!

★ இலங்கை வானொலிக்குத் தமிழகத்தில், அதுவும் சென்னையில்... தமிழ் மக்கள் நல்லதொரு மதிப்பை வைத்திருக்கிறார்கள். இங்கு எப்படி வர்த்தக ரீதியிலான இந்தியச் சஞ்சிகைகள் விரும்பி வாங்கப்படுகின்றதோ அதே ரீதியில் இலங்கை வானொலிக்குத் தனிப்பெரும் செல்வாக்கு, ஆதரவாளர்கள், நேயர்கள் உண்டு. நான் இதுவரை சந்தித்த பல நண்பர்களிடமிருந்து இதைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் கூறிய ஒரு விடயம் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒருநாள் வானொலியில் தங்களுக்குப் பிடித்தமான நிகழ்ச்சிகள் பற்றிப் பேசிக்கொண்டு வரும்போது தமிழ்ச்சேவையில் ஒலிபரப்பாகும் 'சின்ன மாமியே' போன்ற சிங்களப் பொப்பாடல்கள் நன்றாக இருக்கும் என்றார்கள் எனக்கு அதிர்ச்சி! தமிழில் இருக்கும் அப்பாடல்கள் சிங்களமென்றால்...? அதுவும் படித்தவர்களே இப்படிக் கூறினால்...? சிங்களம் எப்படியிருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டவரால் தமிழைக்கூடவா புரிந்துகொள்ள முடியவில்லை! அவர்களுக்கு ஒவ்வொரு சொல்லாய் விளங்க வைப்பதற்குள் போதும்போதுமென்றாகி விட்டது. இதற்கு யாரைப் போய்க் குறை சொல்வது...?

● இலங்கை வானொலியைப் பற்றி எழுதும்போது தஞ்சாவூர் நண்பர் ஒருவர் கூறியது ஞாபகத்திற்கு வருகிறது. 'இலங்கையில் கிட்டத்தட்ட 35 லட்சம் தமிழர்கள் இருக்கிறீர்கள். இலங்கை வானொலி கேட்போர் குறைந்தது 30 லட்சம் என எடுத்துக் கொண்டாலும் தமிழகத்திலுள்ள நாலு கோடித் தமிழர்களில் குறைந்து இரு கோடித் தமிழர்களாவது இலங்கை வானொலியை விரும்பிக் கேட்கிறார்கள். அதாவது இலங்கையரையும் விட இந்தியத் தமிழரே அதிகம் இலங்கை வானொலியை விரும்பிக் கேட்கின்றார்கள். ஆசிய சேவை என வெளிநாட்டினருக்கான சேவை நடத்தினாலும் வர்த்தக சேவையினையே விரும்பிக் கேட்கிறார்கள். எனவே தமிழ்நாட்டு நேயர்களும் இலங்கை வானொலியில் பங்குபெற்ற அனுமதித்தாலென்ன?' என்று கேட்டார். அவர் கேள்வியும் நியாயமானதுதானே...?

★ ஒருநாள் சென்னையில் 'பிராட்வே' பஸ்ராண்டில் பஸ்சிற்காகக் காத்து நிற்கும் போது நண்பர்களிடையே சிவப்பு விளக்குப் பெண்களைப் பற்றிய கதை வந்தது. கதைத்துக் கொண்டிருந்தபோது ஒருவன் சொன்னான். 'உனக்கு நேரே பக்லே பார். மஞ்சள் சாறியுடன் ஒன்று நிற்குது. அது றெட் லைட் கேஸ்தான்.' என்றான். திரும்பிப் பார்த்தேன். 43... 44 வயதிருக்கும். குங்குமம் தலையிலும் நெற்றியிலும் பளிச்சிட்டது. கழுத்தில் தாலி! கையில் ஹான்ட் பாக்? பெரிய இடத்துப் பெண்போல் கொண்டைவேறு போட்டிருந்தாள். நான் நம்ப மறுத்தேன். நண்பன் 'சலன்ஞ்' பண்ணிவிட்டு தனது வலது கன்னத்தின் கண்ணருகே சுட்டுவிரலால் லேசாகத் தேய்த்தான். (சிக்னலாம்... அனுபவப்பட்டிருப்பான் போலிருக்கு) நான் திகைத்து விட்டேன். ஏனென்றால் அவளும் அப்படியே செய்தாள். பின் அவளே கையால் 'வா' என்று அழைத்தாள். இவன் என்னையும் மற்ற நண்பர்களையும் 'டேய் வாங்கடா, சதை குடுத்துப் பாப்பம்' என அழைத்தான். 'நான் வரவில்லை, நீங்கள் போங்கடா' என்றேன் நான். 'டேய் நீ பத்திரிகைக்காறன். இதையெல்லாம் பார்க்கவேணும்' என அழைத்தான். என்னதான் சொல்கிறாள் என்று கேட்கலாமே என்ற சபலம்...? சரி என்று அவளைச் சுற்றி நின்றோம். 'தேவையென்றால் நேரே வந்து கேட்க வேண்டியது தானே? பிறகு அங்க நின்று என்ன சிக்னல் வேண்டியிருக்கு? சரி எவ்வளவு தர்றீங்க...?' எடுத்தவுடன் விஷயத்துக்கு வந்தாள்.

★ சுதா சண்முகநாதன் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ன ரேட்...?' இது நண்பன்.

'நாற்பது ரூபா, முப்பது ரூபாதான். அறைக்குப் பத்து ரூபா... மகள் இரண்டு இருக்கு... வந்து பார்த்துச் செய்யலாம்'

'ஆக இரண்டு பேர்தானு...'

'இல்லை, தேவையென்ருல் கூடுதலாக அரேஞ்ச் பண்ணலாம். ஏன் நான்கூட அது தானே!' இது அவள்.

'உனக்கு எவ்வளவு ரேட்?'

---

● நான் எழுதத் தொடங்கியதற்கு முதற் காரணம் அழுத்திக் கொல்கின்ற சாரமற்ற வாழ்க்கை என்னை நிர்ப்பந்திப் பது. இரண்டாவது காரணம் என்னுள் காட்சிக் கருத்து வடிவங்கள் நிறைந்திருப் பதினுல் என்னுல் எழுதாமல் இருக்க முடி யாது.

— கார்க்கி

---

'அறுபது ரூபா' நான் சும்மாயிருந் தால் பரவாயில்லையே. அதுவரை பேசாமல் இருந்த நான் ஆச்சரியத்துடன், 'அதெப் படி உன்னிலும் விட வயது குறைந்த மக ளுக்கு நாற்பது ரூபா, உனக்கு அறுபது ரூபாவா?' கேள்வி முடியவில்லை. பதில் தெறித்து விழுந்தது.

'என்னிடம் வந்தால் தொழில் கத்துக் கலாம்ப்பா—'

★ சென்னையில் ஓடும் பல்லவன் பஸ்க ளைப் பற்றியும் சொல்லியாக வேண்டும். பஸ் சாரதியின் கண்ணில் படும்படியாக 'கவனமாக ஓட்டு' என எழுதி வைத்திருக் கிருர்கள்' (சாரதிகள் மேல் அவ்வளவு சந்தேகமா?). தாய்க்குலத்திற்குத் தனியி டம் ஒதுக்கியிருக்கிருர்கள். நடத்துனர்கள் அவை தங்கட பாடு. 'ரிக்கற் எடுங்கோ' (அவராய் வந்து கேட்க மாட்டார்) சொல் லிவிட்டு நின்றுவிடுவார். பஸ் போய்க் கொண்டு இருக்கும். நான் சந்தித்த மாண வர்களோ அல்லது நண்பர்களோ அநேகர் ரிக்கற் எடுக்க மாட்டார்கள். டீசென்ராய் நின்று டீசென்ராய் இறங்கி விடுவார்கள். அவர்களை ஒருநாள் கேட்டேன்; 'இடை யில் ரிக்கற் செக் பண்ணுறவர் வந்தால் என்ன செய்வீர்கள்?' 'குற்றப் பணம் இரண்டு ரூபாவும் பஸ் கட்டணமும்தானே' என்ருர்கள் அலட்சியமாக. இதே குற்றப் பணம் ஐம்பது ரூபாவாக இருந்தால் இப் படித் துணிவாக ஓசப் பயணம் செய்வார் களா) அவர்களைக் குறை சொல்லிப் பிர யோசனமில்லை. நான் சென்னை சென்ற ஆரம்பத்தில் பஸ்சில் ஏறி பின்னுக்கு நின்று விட்டேன். கண்டக்டர் முன்னுக்கு நின்ற வர், வந்து ரிக்கற் தருவார்தானே! என்று நின்றுவிட்டேன். எங்கே அவர் வந்தால் தானே? வருவார் வருவார் என நான் பார்த்துக் கொண்டிருக்கையில் நான் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது. இறங்கி விட்டேன். இப்படி எத்தனை எத்தனையோ அனுபவங்கள்... சந்தர்ப்பங்கள்... ★

# யாரறிவார்?

நன்ருக விடிந்தும்
சுருண்டு படுக்கின்ற
ஜீவிகளே...

உங்களின்
கண்களில் ஒட்டியது
நித்திரை அல்ல;
வயிற்றை
முத்தமிட்ட பசி!

உன்று உங்களை
தேனீரும் சந்திக்கவில்லை!
ஓலைக் கூரையைத்
தாண்டி—

புகை வரவில்லையே...?
நான் அறிவேன்—
சமூகம் அறியுமா?

● த. பேரின்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'மகுடி பதில்கள்' ஒரு அனுபவம்!

*அற்புதம்! அர்த்தம்! ஆழம்!*

*சிரிப்பு! சிந்தனை! சீற்றம்!*

ஒருவரிப் பதில்கள்! ஆனால் ஒதுக்க முடியாத தத்துவங்கள்! சிரிப்பை வரவழைக்கும் சிந்தனைகள்! உரித்த பழம்போல் உவமைகள்!

'மகுடி' பதில்களின் மறக்க முடியாத அம்சங்கள் இவை.

கைகளிலே 'சிரித்திரன்' கிடைத்துவிட்டால் கண்கள் தேடுவது மகுடி பதில்களைத் தான். ஈழத்து வாசக நெஞ்சங்களிலே அப்படியானதொரு தாக்கம்! அந்தத் தாக்கத்திற்கு நானும் தப்பியவனல்ல. எனவே அதைப்பற்றி நான் எழுதுவதுகூட தவிர்க்க முடியாததாகின்றது.

முன்பெல்லாம் கையிலே பேனா கிடைத்துவிட்டால் கடவுளைக்கூட விமர்சிக்கும் தைரியம் பிறந்து விடுகின்றது. இங்கே மட்டும் இயலாமையை ஒப்புக் கொள்கின்றேன்.

கண்ணாடி நிலவைக் கையால் அளந்து பார்க்கும் குழந்தைபோல் எனது ரசனையுணர்வுகளை மட்டும் இங்கு கொட்டிவிடுகின்றேன். மற்றும்படி, இது விரிவுரையோ விமர்சனமோ அல்ல. ஏதோ ஒரு சுகானுபவ வெளியீடு. அவ்வளவுதான்.

மகுடி பதில்களில் கேலிகளும் கிண்டல்களும் ஓரளவுக்கு நிறைந்துள்ளன என்பது உண்மையெனினும் அந்தக் கேலிகளுக்கும் கிண்டல்த்தனங்களுக்கும் பின்னால் ஆழமானதொரு சமுதாய நேசிப்பை, சமுதாயம் இப்படிச் சீரழிகின்றதே என்ற ஒரு ஏக்கவுணர்வைக் காண முடிகின்றது என்பது அதைவிட உண்மை.

கேள்வி: தெய்வ பக்தியுள்ள நாடுகள் முன்னேறுகின்றனவா? பதில்; நேரத்தைத் தெய்வமாக மதிக்கும் நாடுகள் முன்னேறுகின்றன. பதிலிலே முற்போக்கு முத்திரையிடுகின்றது! இன்னுமொன்று —

கேள்வி: நத்தார் தினத்தின்போது வல்லரசுகளிடம் நீர் வேண்டுவது என்ன? பதில்: கொட்டிலில் பிறந்த பாலன் யேசுவைத் தியானிக்கும்போது கொட்டிலில் அழும் ஏழைக் குழந்தைகளையும் சிந்தியுங்



கள். ஆயுதம் செய்வதற்குக் கொட்டும் பணத்தால் அவர்கள் கொட்டும் கண்ணீரைத் துடையுங்கள்.

பட்டம் பெற்றவனுக்கு மட்டுமல்ல; படிக்காத பாமரனுக்கும் கூடப் புரியும்படியான முற்போக்குக் கருத்துக்கள். சமூக அநீதிகளைக் கண்டு சீறும் கலைஞனின் சீற்றம், அந்த அநீதிகளைப் படம்பிடித்து விமர்சிக்கும் அற்புதம்... இங்கெல்லாம் மகுடியின் 'பேனா' பேராற்றலைப் பெற்று விடுகின்றது.

கேள்வி: சிலருக்குக் கோபம் திடீரென வருகிறதே? பதில்: குறைந்த நீருள்ள பானை சூடுபிடிக்க நேரம் எடுப்பதில்லை.

# அன்புநெஞ்சன்

சபாஷ்! குறையறிவுக்கும் நிறையறிவுக்கும் உள்ள வேறுபாட்டை, அவ்வேறுபாட்டின் எதிரொலிப்பை வாசகர் நெஞ்சில் பதிக்க மகுடி கையாண்ட உவமைத் திறன் வெகு அற்புதம்.

வாழ்க்கை அனுபவங்களை என்ன மாதிரி வார்த்தைகளில் அமைக்கிறார் பாருங்கள். சில இடங்களில் 'சிலேடை' ஆடைமாற்றிக் கொள்கிறது. (உ-ம்) கேள்வி: மனைவிக்கும் மதுவுக்கும் வித்தியாசம் என்ன? பதில்: மது உயிருக்கு உலை வைக்கும். மனைவி உயிர்வாழ உலை வைப்பாள்.

சொற்கள் சர்க்கஸ் செய்கின்றன. தமிழ் தாலாட்டுகின்றது. இன்னும் .. இன்னும்...

தங்க முலாம் பூசப்பட்ட தத்துவ உண்மைகள், கேலிப் பூச்சுக்குள் துருப்பிடித்துக் கிடக்கும் உலக ஊழல்கள்... சேகரித்தே வைத்து விடலாம். எதிர்காலச் சந்ததியினருக்காக! பொன்மொழிகள் சேர்ப்பது தான் உன்னுடைய பொழுதுபோக்கென்றால்; ஷெல்லியையும் ஷேக்ஸ்பியரையும் மட்டும் தேடாதே. முடிந்தால் என்னுடனும் தொடர்பு கொள். (ஏனென்பது உனக்குப் புரிந்திருக்குமென நினைக்கிறேன்.

உண்மைக்கு இப்பொழுதெல்லாம் ஊதியமே கிடைப்பதில்லை. மாறாக; உதையே கிடைக்கிறது. இந்த நிலையில் உண்மைக்காக வாழ்ந்த அன்றைய அரிச்சந்திரன் இன்று இருந்தால் எப்படியிருக்கும்? மகுடியையே கேட்டுப் பார்ப்போம். கேள்வி: அரிச்சந்திரன் இன்று இருந்தால்? பதில்: கரெக்டர் சேர்ட்டிபிகேட் பெறுவதற்குத் திண்டாடியிருப்பார்.

திறமையான கேள்வி பதில். இலக்கிய கர்த்தாவின் வெற்றி இன்னொன்றிலும் தங்கியுள்ளது, வாசகனின் குறிப்பிட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கும்போது...வாசகன் எதிர்பார்க்கும் பதிலை வழங்காமல், கேட்கப்பட்ட கேள்வியுடன் முழுக்க முழுக்கத் தொடர்புடைய, ஆனால்வாசகனால் சற்றும் எதிர்பார்க்க முடியாத சிறந்ததோர் பதிலை வழங்குவதன் மூலம் வாசகனைத் திகைப்பில் ஆழ்த்தல்.

இந்தத் திறமை மகுடிக்குக் கைவந்த கலை என்பதை பதில்களின் பல்வேறு இடங்களில் அவதானிக்க முடிகின்றது.

கேள்வி; அரசியல்வாதிகள் மேலானவர்களா? பதில்; பெட்டைக் கோழி மேலானது... முட்டையிட்ட பின்தான் கொக்கரிக்கும்.

பதிலை வாசிக்கும்போது எம்மையறியாமலேயே சிரித்து விடுகிறோம்.

கேள்வி: எவன் அரசியல்வாதி?

பதில்: ஒன்றும் சொல்வதிற்குல்லாமல் நீண்டநேரம் பேசுபவன்.

'நீதியே ஜெயிக்கும்' 'நல்லவன் வாழ்வான்'... இப்படி மரபு ரீதியான நம்பிக்கைகள்கூட இன்றைய சமுதாய அமைப்பில் செயலிழந்து போகின்றன.

கேள்வி: முயற்சி திருவினையாக்குமா? பதில்; நீதித்தராசு ஒருபக்கம் சாயும் அரசாட்சியில் முயற்சி தெருவினையாக்கும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி செய்து படித்தவனைக்கூட 'தரப்படுத்தல்' தெருவிலே விடுகிறது.

சுறுசுறுப்பு உள்ளவனுக்குக் கூட 'சிபார்சு' இல்லாமல் வேலையே கிடைப்பதில்லை. இங்கே— முயற்சி உள்ளவன் தெருவிலே முடக்கப்படுகிறான். 'முடிச்சு' உள்ளவனுக்கு 'மூளை' கூடப் பரிசோதிக்கப்படவில்லை. வேலை நியமனம் வீடு தேடி வருகிறது. இதைத்தான், 'நீதித் தராசு ஒரு பக்கம் சாயும் அரசாட்சியில் முயற்சி தெருவினையாக்கும்' என்கிறார்.

நடைமுறை நிகழ்வுகளுக்கு எவ்வளவு பொருத்தமான பதில் பார்த்தீர்களா?

---

★ தத்துவங்களும் வாழ்க்கையும் இரு சமாந்திரக் கோடுகள். வாழ்க்கை அனுபவங்கள் நீள நீள தத்துவங்களும் வளர்ந்து கொண்டே போகின்றன. வாழாமல் சிந்திப்பவனும், சிந்திக்காமல் வாழ்பவனும் தத்துவஞானி ஆகின்றான். ஆனால் தத்துவமும் வாழ்க்கையும் சந்திப்பதேயில்லை. ★

---

அடுத்து இலக்கியங்கள் பற்றி மகுடியாரின் சில அபிப்பிராயங்கள்...

**கேள்வி:** இலக்கியங்களுக்கு என்ன தேவை? பதில்: அச்சுப் புஷ்டியும், அர்த்த புஷ்டியும் வேண்டும்.

**கேள்வி:** எழுத்தாலும், மேடைப் பேச்சாலும் புரட்சி செய்ய விரும்புவோர் பற்றி உமது கருத்து? பதில்: புழுதிபடாப் புரட்சி வீரர்.

**கேள்வி:** ஒரு ஞானி எழுத்தாளனாக இருந்தால்...? பதில்: பேனா கலங்கரை விளக்கமாகும்.

ஒரு படைப்பு இலக்கியமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனில், முக்கியமாக அங்கேயொரு 'இலக்கு' காணப்பட வேண்டும். இந்த இலக்கை மகுடி பதில்களின் பல்வேறு இடங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் காணக்கூடியதாக இருக்கின்றது. ●

# உணர்வுகள்

பசி என்ற உணர்வு கண்டு
வயிற்றுக் குடல் —
துடிக்கிறது...
சோகம் என்ற
உணர்வு கண்டு
கண்கள் மழை
பொழிகின்றன...
துன்பம் என்ற
உணர்வு கொண்டு
நெஞ்சம் குமுறி
அழுகிறது...
எழுத்து என்ற
உணர்வுடனே
கைகள் கிறுக் கின்றன...
கண்டதும் கற்கும்
உணர்வுடனே —
கைகள் துடிக்க...
கண்கள் பார்க்க...
நெஞ்சம் ரசிக்க...
உணர்வு தெரிகிறது.

★ 'பரந்தன் கலைப்புஷ்பா'

# 'கலைஞன்'

நான் ஒருகாலத்தில்
பிரபல்யம் வாய்ந்த
கவிஞன் தான்;
ஆனால்...
இப்போது —
காவியுடுக்கும் நிலைக்கு
வந்துவிட்டேன்
காரணம்...?
கவிதை தான்!

★ வக்ரதுண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லேசான தூறல்தான் பொழிந்து தள்ளவில்லை!

பூபாளம் பாடி ஆரம்பித்த மேகத்தின் பொழிவு அதன் உள்ளடக்கப் பொலிவில் குன்றி, பாடிய பூபாளத்தில் காணும் தடுமாற்றங்களில்தானோ என்னவோ லேசான தூறல்தான்! பொழிந்து தள்ளவில்லை.

'இந்த மேகம் இலக்கிய மழை பொழிவதற்கில்லை... சிலர் வாழ பலர் வதைபடுகின்ற சீர்கேட்டைச் சீர்திருந்தவந்த சிவப்புச்சட்டைக்காரர்களுமல்ல... என்று.... இன்னும் பல சேர்த்துச் சொல்லி, ஆனால் பூச்சியத்தில் தம்மை வைத்துக்கொண்டு ஆதரவான ஆலோசனைகளைக் கேட்டால் எதன் பாற்பட்டதாகக் கூறுவது வாசக இதயங்கள்...?

**ஆயிலியன்**

சுற்றிப் பார்த்தால் புதுக்கவிதாசிரியர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பமும் வாய்ப்பும் மேகத்தின் மூலம் முற்றுமுழுவதாக இடம்பிடித்திருக்கப் போவதை நினைத்து அவர்கள் சார்பாக வெளிக்கிளம்பிய சந்தோஷ உணர்வுகள்... வளரட்டும்! ஆனால் ஆரம்பத்திலே(யே) அபாயச் சங்கொலித்தது போல் நாளடைவில் மேகம் கவிதைத்தொகுதியே ஆகிவிடும் அபாயத்திலிருந்து மீளட்டும்.

● 'மேகம்' முதல் இதழில் கேட்டுக்கொண்டபடி பலர் விமர்சனங்களை அனுப்பியிருந்தனர். அவற்றுள் ரூபா 25/- சன்மானம் பெறும் விமர்சனமாக இது அமைகின்றது. ஆயிலியனுக்கு சன்மானத்தொகை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விமர்சனத்தில் கலந்துகொண்ட ஆர்வலர்களுக்கு எமது நன்றி. இம்முறையும் விமர்சனத்தில் கலந்துகொள்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம். வழமைபோல் சன்மானம் உண்டு. (ஆ-ர்)

---

★ 'இலக்கியத்திலும் கலைகளிலும் தோல்வி கண்டவர்கள்தான் விமர்சகர்கள் ஆகின்றார்கள்' ★

— பெஞ்சமின் டிலோவி

---

ஒரு விஷயம்; இந்தக் கவிதாசிரியர்களுக்கெல்லாம் குறிப்பிட்ட ஒரு இனத்தைத் தொடர்ந்து இழிவுபடுத்தவே வேண்டும் என்று சாரப்பட்ட எண்ணமா? அல்லது அந்தக் கவித்துவம் அதற்குள் மட்டும்தான் நின்று வேலை செய்யுமா? எழுதுகிறவர்கள் கற்பனை உலகிலிருந்து மீண்டு காலமும் பல ஆயிற்று. நிஜ வாழ்க்கையில் நடப்பது என்ன? பெண்ணினம் மட்டும்தான் ஆணினத்தால் ஏமாற்றப்படுகின்றதா? காதலி வேறொருவனைக் கைப்பிடித்ததினால் காதலன் தற்கொலை' — இன்றைய பத்திரிகைச் செய்தி! பாடமாக்கிப் பரீட்சை எழுதுவதற்கும் பாடத்தைப் புரிந்து எழுதுவதற்கும் எவ்வளவு வித்தியாசம்? இனியாவது நடமுறையைப் புரிந்து எழுதட்டும்... இருந்தாலும் கவிதைகளின் சொற்பிரயோகமும் கோர்ப்பும் நன்றாகவே இருக்கின்றன. இவையே கடைசிவரை படிக்கச் சொல்லித் தூண்டுகிறது. அட்டைக் கவிதை ஒரு நல்ல மாற்றம். கவிதைக்கேற்பப் பொருத்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலும் புதுமையாகவும் இடம்பிடித்திருக்கிறது.

கவிதை பற்றிய கட்டுரை இப்படி ஒரு சிறு சஞ்சிகையில் இவ்வளவு அழகாக, தெளிவாக கூறப்பட்டிருப்பது ஆச்சரியம்தான். ஒரு சபாஷ்! படிக்கக் கிடைத்தவர்கள் பின் கவிதை எழுத ஆரம்பித்தாலும் அதிலும் ஆச்சரியம் இல்லைத்தான் என்று சொல்ல இருக்கிறதுதான் விடயம் அதில்.

'அழியாத காலங்கள்', 'தரிசனம்' — சிறுகதைகளில் தரிசனம் நினைவில் நிற்கிறது. எங்கோ ஆரம்பித்து எங்கோ போனாலும்... போய் முடிந்தாலும் தலைப்புத் தரிசனத்துக்குப் பிழையில்லாமல் அது ஒரு தரிசனக் கதையாகவே தோன்றுகிறது. தெருவில் போகிற ஏழையாக இருந்தாலும் நின்று தரிசிக்கும்போது — பிள்ளையாரை வைத்துச் சம்பாதிப்பவர்களுக்கு — ஐந்து சதமாவது உண்டியலில் விழுகின்றது. பசி என்று கூறி அழுபவர்க்கோ உதைதானே விழுகிறது. சத்தியன் போன்றோர் இருக்கும்வரை யாவது பசி என்று வருபவர்கள் புசித்து இருக்கலாம்... இருக்கட்டும்.

அக்கரையிலிருந்து வருபவை 'குப்பை' என்று பொதுவாகக் கூறப்பட்டாலும் மேகம் சஞ்சிகையில் விளம்பரம் தரப்பட்ட 'கலாச்சாரம்' இதழ் வேறுபட்டதுதான். குப்பையிலே மாணிக்கம் என்பது இதைப் படம் பிடித்துக் காட்டத்தானோ என்றும் தோன்றுகிறது.

மிகுந்து போனவை என்பதினாலா அல்லது தேவையோ தேவை என்பதினாலோ... கடைசி ஆறு பக்கங்களில் தொடர்ச்சியான விளம்பரங்கள்... பார்க்க ஏதோ என்னவோ மாதிரி... இடையிடையே புகுத்தியிருக்கலாம்.

மொத்தத்தில் — மழலைகள் இவர்கள், அடுத்தடுத்த சஞ்சிகைகளில் நன்றான வளர்ச்சியைக் காணலாம் என்று நம்பியிருக்கலாமா?

# கடிதங்கள்!

இம் மண்ணில் உதித்து
மாசில்லா உவகையுடன்
மக்கள் கையில் தவழ்ந்து
கலை, கவிதை, விமர்சன
இலக்கிய மழை பொழிந்தே
மறைந்து ஓடிடாமல்
மன்னுயிரைக் கண்ணுயிராய்
நேசித்தே பவனிவர விரும்பி
பூபாளம் பாடி புதுமை படைக்க வந்த
இம் மேகத்திற்கும் தாகமுண்டாம்
வாழ்க! வளர்க!!
இலக்கிய மழையை துளித்துளியாய்
பொழிலுடன் பொழிக!

க. முரளிதரன், நல்லூர்.

இலங்கைக் கலாச்சார வானத்தில் நவயுகத்தை நோக்கிப் பொழியவிருக்கும் இலக்கிய 'மேகம்' இதழைப் பெருமையுடன் பெற்றுக் கொண்டோம்.

நவயுகா (கலாச்சாரக் குழுக்களின் கூட்டமைப்பு) சார்பாக பெருமைமிகுந்த நல் வாழ்த்துக்களை இக்கடிதம் வாயிலாகப் பொறிக்கின்றோம்.

சம்பிரதாயமான பாராட்டல்ல இது!

உணர்மைகளிலிருந்து பொங்குகின்ற எண்ணங்களின் பிரதிபலிப்பே இது! தொடரட்டும் தங்கள் பணி!

'மேகம்' மென்மேலும் திரட்சிபெற்று வரண்டு கிடக்கும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தின் மீது வெகுவாகப்பொழிந்து நவீனமான ஒரு செழிப்பை — புத்துயிர்ப்பையேற்படுத்தும் என்பதில் முழு நம்பிக்கையுள்ளவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

இந்திய மண்ணில் நாங்களும், இலங்கை மண்ணில் நீங்களும் பொழிகின்ற கலாச்சார மழை, தமிழறிந்த வட்டாரங்களின் மூலைகளில், நிலபிரபுத்துவ ஏகாதிபத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகள் ஏற்பித்த வெப்பங்களைத் தணிக்கும் என்பதில் நமக்குப் பரஸ்பரம் திடமான நம்பிக்கை உண்டு.

ஆதிக்கமற்ற, அதிகாரத் தோரணையற்ற சுயமை வெளியீடுகளுக்காக, முழுமனித விடுதலைக்காக சமூகக் கடமைகளில் இறங்கியிருக்கும் நமக்குள்ளேயும் மேற்குறிப்பிட்ட ஆதிக்க அதிகார மனநிலைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். விஞ்ஞானமுறையில் விவாதங்களை ஏற்படுத்தி ஒத்த சிந்தனையுடன் செயற்படுங்கள்!

மக்களிடமிருந்து நம்மை அந்நியமாக்கிக் கொள்ளாமல் இருக்க இதனையே அத்திவாரமாகப் போடுங்கள்.

விமர்சனங்களை ஏற்று சுயபாசப் பக்குவப்படுத்தும் மனத்திடம் கொண்ட படைப்பாளிகளின் 'சுயமை' வெளியீடுகளுக்காகவும், படிப்பாளிகளின் சிந்தனை விஹாசத்திற்காகவும் மேகம் பொழியட்டும்!

மனித விடுதலையை நோக்கிய கலாச்சார வெளிவடிவங்களின் ஊடான எவ்வித்தச் செயற்பாடுகளுக்கும் அகிலம் எங்கும் செயற்படுவோரை நமக்குள்ளே அரவணைக்கும் நவயுகா மேகத்தையும் அரவணைத்துள்ளது என்று மேலும் அழுத்தமாகக் கூறுகின்றோம்.

ஜாப்ஸன் — நவயுகா, சென்னை-10

இதழின் தோற்றம், அமைப்பு முதலியன நன்றாயுள்ளன ஆயினும் மேலும் மேலும் திருத்த இடம் உண்டு. ஆர்வமுள்ள நண்பர்கள் விலையைக்கண்டு சிறிது அஞ்சுகின்றார்கள். இதற்கு ஏதும் வழி செய்ய இயலுமா?

பா. சண்முகநாதன், — கிளிநொச்சி.

தங்கள் இருதிங்கள் வெளியீடான 'மேகம் முதல் இதழ் படித்தேன்! சுவைத்தேன்' என் மழைத்துளி உங்கள் மேகத்து இதழ்களிலும் தொட்டிருக்க விரும்பும்...

மா. திருலிங்கம் — மண்டைதீவு.

# விமர்சகர்கள்!

சில ஆடுகள்
மந்தத்தினால்—
நுனிப்புல் மேய்கின்றன!
இன்னுஞ் சிலவோ
இளம் புற்களை
மிதித்து...!
நாசப்படுத்துகின்றன!
மந்தத்தினால் அல்ல,
மமதையினால்...!

பிற்குறிப்பு:
(விதிவிலக்குகள் மன்னிக்கட்டும்)

★ — 'இயமன்'

இளைய தலைமுறையினரை ஊக்குவிக்க தாங்கள் ஏற்றுக்கொண்ட நடவடிக்கை போற்றுதற்கரியனவே! இருப்பினும் தாங்கள் கூடியவரை புதிய இளம் தலைமுறையினரை, முதலாவது இதழில் அறிமுகம் செய்து இடமளித்திருக்கலாம்!

'கலைப்புஸபா' — பரந்தன்.

தமிழ் இனத்தின் சுதந்திரப்
பிரச்சனையை உங்கள் —
எழுத்துக்கள்
மேகத்தில் காட்டட்டும்;
மேகமும்,
தமிழினத்தின் விடுதலைக்காக
இலக்கிய மழை பொழியட்டும்!

'நல்லை அமிழ்தன்' — திருமலை.

பொதுவாகச் சஞ்சிகைகளில் இடம் பெறும் அம்சங்களையே 'மேகம்' கொண்டிருந்த போதிலும், அந்தப் பொதுமையிலும் ஒரு புதுமையை என்னால் காணமுடிகின்றது.

விக்னு செல்வநாயகம் — யா. பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதெல்லாம் பத்திரிகை தொடங்குபவர்கள் ஜீவா என்ற தனிமனிதனைத் தாக்குவது பழக்கமாகி விட்டது. மல்லிகை ஈழத்து இலக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதா என்று பாருங்கள். மேடைகளில் நாங்களும் சொறியர் கூட்டத்தில் சேர்ந்து விட்டோம் என்று முத்திரை குத்திப் பெருமைப்பட வேண்டாம்.

பால-ரகுவரன் ?

'மேகம்' இளைய தலைமுறையினரின் சிந்தனைத் திறனையும், அதனை வெளிப்படுத்தும் வீச்சான நடையையும் பிரதிபலிப்பதைக் காண்கின்றேன். கவிதைகளில் ஒரு வேகம். கதைகளில் ஒரு தாபம் — இதய நெருப்பை அனலாகவே வெளியிடுகின்றன. பூடாளம் நடை நன்று. ஆனால் இந்த மேகம் எதற்காக என்று இறுதிவரை கூறவில்லையே!

'அன்புமணி' மட்டக்களப்பு.

மல்லிகை டொமினிக் ஜீவாவின் செயல் மனிதர்களிலிருந்து மாறுபட்டது என்று எண்ணத் தோன்றவில்லை. சீதனக் கொடுமையை ஒழிக்கக் கதை எழுதிப் பரிசு பெற்றுக் கொண்டிருக்கும் பிரபல எழுத்தாளர்கள் இலட்சக் கணக்கில் சீதனம் பெற்றுத் திருமணம் செய்வதை விடவும் அதிகமாகவா ஜீவா செய்து விட்டார்?

கதிர் சிவலிங்கம், மாங்குளம்.

என்னைப் பொறுத்த மட்டில் இளையோருக்கு முன்னுரிமை கொடுத்து மேகம் வெளிவர வேண்டுமென விரும்புகின்றேன். காரணம்... அப்பொழுதுதான் மணிக்கொடி குழுவைப் போல், வானம்பாடி குழுவைப் போல், ஒரு மேகம் குழுவையும் தோற்றுவிக்கலாம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

த. பேரின்பம், அக்கரைப்பற்று.

# எங்கு சென்றாய்?

● விக்னு செல்வநாயகம் ●

நித்திலம் கொழிக்கும் நீலக்கடல் ஓரத்தில்
நித்தம் உன் நினைவால் ஏங்கி
நித்திரையை மறந்து நிம்மதியை இழந்து
நிர்க்கதி ஆக்கிவிட்டு எங்கு சென்றாய்?

பத்துமாதம் சுமந்தீந்த அன்னையை மறந்து
சொத்து சுகமெல்லாம் தூசாக எண்ணி
அத்தான் உங்களுடன்வாழும் காலத்திற்காய்
காத்திருப்பேன் என்றுவிட்டு எங்குசென்றாய்?

மண்மீது விண்ணே இடிந்து விழுந்தாலும்
கண்ணா உங்கள் காலடியில் வாழ்வதே
பெண்ணான நானும் பேரின்பம் பெறுவே
னென்று
தேனாக உரைத்துவிட்டு எங்குசென்றாய்?

கெஞ்சும் விழியதனில் கோடிகதை தேக்கி
கொஞ்சும் மொழிபேசி கோதை உனக்காய்
பஞ்சையொத்த உள்ளத்தால் தந்த பரிசெல்
லாம்
நஞ்சாய்க் கசந்துவிட்டதென எங்குசென்றாய்

அழகாலே ஆடவரை மயக்கி ஏமாற்றும்
பாழானகுணம் உன்னிடம் இல்லையென
எண்ணினேன்
நல்லின மங்கையரின் ஏமாற்றும் குலமரபை
நாளையெனக்கு காட்டிவிட்டு எங்குசென்றாய்?

என்னைவிட அழகில் அந்தஸ்த்தில் உயர்ந்த
வனுக்காக
அன்பை மறந்து அவனுடன் சென்றாயோ?
இன்பம் எல்லாம் என்னுடன் பகைபாராட்ட
துன்பந்தன்னை தந்துவிட்டு எங்குசென்றாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகையற்ற அனுதாபங்கள்!

★ சிவமலர் செல்வத்துரை ★

பலநாட்கள் பழகும் பழக்கம் மனதிற் படிந்து விடாமற் போவதுமுண்டு. ஒரு சில நிமிடப் பரிச்சயம் ஒரு பிறவி முழுவதும் மனதில் உறைந்து விடுவதுமுண்டு... அப்படியான ஒரு சம்பவம்தான் அதுவும்— ஆமாம், அது ஒரு கோடைக்காலத்தின் பகல்நாள். அந்தப் பட்டினத்தின் பல கடைத் தெருக்களையும் சுற்றிவந்த அந்த நான்கு கால்களும் அக் குளிர்பானசாலையைக் கண்டதும் சற்றுத் தயங்கின. அந்த இரண்டு முகங்களும் ஒன்றையொன்று ஒரு கணம் நோக்கின.

'ஏதாவது குளிர்பானம் ஒன்று குடித்தால் நல்லது. மிகவும் களைப்பாயிருக்கிறது'

'எனக்கும்தான் களைப்பாயிருக்கின்றது. ஆனால் கைவசம் ஒரு சதமுமில்லை. கொண்டு வந்த பணமெல்லாம் புத்தகங்கள் வாங்குவதில் முடிந்து விட்டது'

'என்னிடம் நான்கு ரூபாய் இருக்கின்றது. அதற்குள் அடங்கக்கூடிய விலையில் ஏதாவது பானம் குடிக்கலாம் வா!'

அவ்வளவோடு அந்தக் குட்டி விவாதம் முடிந்தது. அவர்கள் அந்தக் குளிர்பானச் சாலையுள் நுழைந்தனர். சாலையின் வாயிலில் பல்வேறு பொருட்களின் பட்டியல் இருந்தது. சனங்கள் அமரும் கூடத்தில் யாருமில்லை. அவன் மட்டுமிருந்தான்.

'என்ன பானம் இருக்கிறது?'

'கிறீம் சர்பத்...பிளேயின் சர்பத்...'

'அவ்வளவுதானா?'

'இன்றைக்கு இவைமட்டும்தானிருக்கிறது...'

சிறுகதை

'பிளேயின் சர்பத் என்ன விலை'

'ஒரு கிளாஸ் இரண்டு ரூபா'

'இந்த ஊரிலேயே மிகவும் பெரியது வினோதா குளிர்பானசாலை. அங்க இதை விட விலை குறைவு...'

'அவர்களிடம் வாங்கித்தான் நாங்கள் விற்கின்றோம். ஆனபடியால்தான் விலை அதிகமாயிருக்கின்றது'

---

சிறுகதை எழுதுவது மிகவும் கடினம். சுருங்கச் சொல்லும் சிறுகதையில் நயமும் நமது திறமையும் வெளிப்படும் சாத்திக்கூறுகள் அதிகம். எனக்கும் கூட சிறுகதைகள் எழுதுவது மிகவும் பிடிக்கும். ஆனால் எழுத்துச் சொல்வது சிறுகதைகளைத்தான்.

★ சுஜாதா

---

'ஏன் நீங்கள் தயாரிச்சால் என்ன'?

'எங்களுடைய கடையில வேலை செய்கிறவர்களுக்கு அது செய்யத் தெரியாது' சொல்லிவிட்டு அவன் உள்ளேபோய் இரண்டு சர்பத் கிளாஸ்களைக் கொண்டு வந்தான். இந்த இடைவெயியில் அந்த இருவரும் அவனைப்பற்றி விவாதித்தார்கள். அவனுக்கு ஒரு பத்து வயதுக்கு மேலிராது. இன்னும் பால்மணம் மாறாத முகமும் வெள்ளை உள்ளமுமாக அவன் எந்த உள்ளத்தையும் ஐந்தே நிமிடத்தில் கவரக் கூடியவனாக இருந்தான். அவர்களிடம் சர்பத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயைதானு ...?

வக்ரதுண்டர்

உன் மோனத் தவத்தின்
பிரதிபலிப்பால்—
எனது...
பிரமச்சாரியத்தின்
ஜீவவிழுதுகள்
உன் மலர்மேனி
தழுவுகின்றன.

இரவுபகல் புரியா
இன்பக்களிப்பின்
இறுதியில்—
மாய வாழ்வின்
ஜாலவித்தைகளை நீ
புரிந்துகொண்டபோது
ஓ...!
என்னை இழந்த
இரவுகள் எத்தனை?

வானக் கூரையின்
நட்சத்திர ஒழுக்குகள்
உன்—
அழகின் பெருமைகள் பாடும்
நீளக் கூந்தல் நுனியில்
என் இதயம் ஆடும்...
இழந்துவிட்ட என் இதயத்தின்
ஒளிக்கசிவில் —
மரத்துவிட்ட உன் உணர்வுகளை
மீட்டும் கலைஞன் ஆவேன்...

காளைஎன் நீளவிரல்கள்
கன்னியுனை வீணையென
மீட்டும்...
நாளைபோய் நாளை
மறுநாள் வந்து—

காலக் கனிவின்
கடைசிப் பக்கத்தில்
நாலுபேரை நம்பிநான்
நலிவுற்றுக் கிடக்கையில்
என்நீள விரல்களும்
உன்—
நீளக் கூந்தலும்
பொலிவிழந்தே போகும்.

காலதேவனின்
கொடுங்கரங்கள்
உன்னிடமிருந்து
என்னை—
பிரிக்கும்போது அறிவாய்
காதல் எவ்வளவு
போலியானது என்று...

---

கொண்டுவந்து கொடுத்துவிட்டு அவன் மறுபடி பேசத் தொடங்கினுன்.

'எங்கட முதலாளியாருக்குக் கடையை நல்லாக நடத்தத்தான் ஆசை... புதுப்புது பானங்களையெல்லாம் விற்கவேண்டுமென்று நினைக்கின்ருர். ஆனுல் நினைத்தபடி இந்த உலகத்திலே என்னதான் நடந்து முடிகிறது. ஹூம், பாவம்! நல்ல வேலைக்காரர் இல்லாததாலே ஒன்றுமே சரியாயில்லை.' என்று அவன் கதையைச் சிறிது நிறுத்தினுன். சற்றுப் பொறுத்து மேலும் பேசினுன்.

'அங்கே அவங்களெல்லாம் பெரிய பள்ளிக்கூடம் போருங்கள்' என்று அவன் சொன்னுன். அதை அவன் சொல்லும் போது அவனது கண்ணும் மனமும் ஏதோ ஏகாந்தத்தில் சஞ்சரிப்பதைப் போலிருந்தது. அவன் அவ்வாறு தொடர்பில்லாமல் பேசியதால் என்ன சொல்கிருன்; யாரைப்பற்றிச் சொல்கின்ருன் என்ற விபரம் கேட்பவர்களுக்குப் புரியவில்லை. பின்னரும் அதைப் பற்றி அவனே விளக்கமாய்ப் பேசினுன்.

'நான் படித்த பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பு மட்டும்தானிருக்கிறது. நான் நாலாம் வகுப்பு மட்டும்தான் படித்தேன். வகுப்பில் நான்தான் முதலாம் பிள்ளை. நான் பெரிய வகுப்புப் படிப்பேன் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாம் வகுப்பு வாத்தியார் கூடச் சொல்லுவார். ஆனால் எனக்குப் படிக்கவே கிடைக்கவில்லை. ஏனென்றால் எனக்கு அப்பாவில்லை. என்னோட படித்தவங்களுக்கெல்லாம் அப்பா இருக்கிறார்கள். அந்த அப்பாமார் அவங்களைப் பெரிய பள்ளிக்கூடங்களில படிக்க அனுப்பிற்றினம்... ஆனால் நான் மட்டும்... ஊஹூம் எனக்குத்தான் அப்பா இல்லையே!' அவன் கண்கள் கலங்கின.

'ஏன் உன் அம்மா எங்கே?'

'அம்மா வேறு கல்யாணம் செய்திட்டா, சித்தப்பா பொல்லாத குடிகாரன். அவருக்கு என்னைக் கண்டால் பிடிக்காது. அது தான் என்னை இந்தக் கடையில கொண்டு வந்து விட்டிட்டார். என் படிப்பும் போயாச்சு...'

'உன்னை உன் அம்மா வந்து பார்க்கிறதில்லையா?'

'இல்லை! சித்தப்பாதான் இடைக்கிடை வந்து பார்ப்பார். என் சம்பளப்பணத்தை வாங்கிக்கொண்டு போக வருவார்' என்றான்.

அவன் கதையைக் கேட்டபடி சர்பத் குடித்து முடித்தார்கள்.

நான் நல்லா இங்கிலீஸ் படிப்பேன். கணக்குச் செய்வேன். சொன்னதை ஒழுங்காகச் செய்வேன். அதுதான் நாலாம் வகுப்பு வாத்தியார் நான் பெரிய படிப்புப் படிப்புப் படிப்பன் என்று சொன்னவர்... அதுக்கிடையில சித்தப்பா என்னை இங்க கொண்டுவந்து விட்டிட்டார்.'

அவன் தன் கண்களிலிருந்து கசிய முயன்ற நீரை சடுதியில் மாற்றிக் கொண்டான். கதை கேட்டவர்களின் முகங்கள் அனுதாபங்களைப் பறை சாற்றின. அதை அவன் வரப்பிரசாதமாகவே ஏற்றுக்கொண்டான்.

'நான் பற்றறியில வேலை செய்யிற லைற் மிசின் ஒன்று செய்து வைத்திருக்கிறன் பார்க்கிறீங்களா?' என்றான். உள்ளே ஓடிப்போய் ஒருசிறு மரப்பெட்டியை எடுத்து வந்தான். ரோச் லைற் பற்றறிகள், பல்ப் சில வயர்கள் என்பவற்றைத் தொடுத்து ஒரு லைற் மிசின் செய்து வைத்திருந்தான். அதுபற்றிப் பார்ப்பவர்கள் பாராட்ட வேண்டுமென அவன் மனம் மிகவும் எதிர்பார்த்தது. அதை அவர்களும் உணர்ந்தார்கள். பாவம் அவன் மிகவும் திறமைசாலி... அவனுக்குப் படிப்பதில் எவ்வளவோ அதிக ஆர்வமிருக்கிறது. ஆனாலும் அழிந்து போகிறானே! என்று அவர்கள் மிகவும் அனுதாபப்பட்டார்கள். அவனுக்குக் கைச்செலவுக்காகக் கொஞ்சம் சில்லறை கொடுக்கலாம் என்று நினைத்தார்கள். ஆனால் அவர்களின் கையில் ஐம்பது சதமும் மீதமிருக்கவில்லை. அவனைப் பார்க்கப் பார்க்க அவர்களின மனம் மிகவும் அனுதாபப்படுகின்றது. அவனுக்கு ஆதரவாக ஏதாவது செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். ஆனால்... அதைச் செய்வது? அந்த நினைவு நினைவாகவே இதயங்களில் நின்றது.

'அப்போ தம்பி நாங்கள் போய் வருகிறோம்' அவர்கள் விடைபெற்றுப் புறப்பட்டார்கள். அவன்... அவனது நடத்தை... அவனது அடங்காத ஆர்வம்...ஆகிய யாவும் அவர்களது மனங்களில் கோடுகளைக் கீறின. அவன் அவர்களை மிகவும் ஆர்வமாகவும் ஆசையோடும் பார்த்தான். 'என்மேல் அனுதாபமுள்ளவர்களே! ஏன் எனது ஆர்வத்தையும் திறமையையும் பற்றி ஒரு சொல்லாவது பாராட்டாமல் போகிறீர்களே... எதற்காக?' என்று அவன் பார்வை கெஞ்சியது. இப்போதே ஆர்வ மேலீட்டால் அனுதாபத்துக்குரியவனாகி வருகிறான். அவனை ஆக்கபூர்வமாக முயன்று ஒரு நிபுணனாக்க முடியாத நாம், அவனைப்பாராட்டி ஆசையை வளர்த்துப் பைத்தியக்காரனாக்க வேண்டுமா என்ன? என்று அந்த இருவரும் நினைத்தார் உள்ளேகளாக்கும்.

✳

# தமிழ் இலக்கியத்தின் வடிவங்கள் - கர்த்தாக்கள் சில பார்வைகள் ...

கணபதிகணேசன்

தீர்த்தக்கரையும்;
அதன் பணிகளும்—

கடந்த ஒன்று, ஒன்றரை வருடங்களுக்குள் இலங்கைத் தமிழிலக்கியப் பரப்பில் வெளிவந்திருக்கும் சஞ்சிகைகள் ஒரு இலக்கிய விழிப்புணர்ச்சிக்குச் சான்ருக அமைகின்றன, அவற்றுள் அமைப்பிலும், அழகிலும், உள்ளடக்கத்திலும் சிறப்புற்று விளங்குவது 'தீர்த்தக்கரை'.

இதன் வாசகர்கள் யார்? எப்படியிருப்பார்கள்? எப்படியிருக்க வேண்டும்? என்பதை தீர்த்தக்கரை உணர்ந்தே இருக்கின்றது. அதன் முதலாவது இதழின் ஆசிரியர் குறிப்புரை இதற்குச் சான்று பகர்கின்றது.

...அப்படி நீங்கள் ஆதரவு
அளிக்கவில்லை என்ருல்
நாங்கள் பேசாமல்
எங்காவது ஓடிப்போய்
பொந்துகளில்
பதுங்கிக் கொள்வோம்.
பிறகு நீங்கள்
முணங்கக் கூடாது
இவர்கள் எல்லோரும்
இப்படித்தான்
ஒரு இதழோடு நாடி தளர்ந்து
போகிறவர்கள் என்று...

அதன் முதலாவது ஆசிரியத் தலையங்கத்தில் '...அல்லலுறும் எழுத்தாளர்களைப் பார்த்தும்; வந்து குவியும் மூன்ருந்தர சஞ்சிகைகளில் புதையுண்டு கிடக்கும் பல தரமான வாசகர் கூட்டத்தைப் பார்த்துமே நாம் எம்மை இந்த அக்கினிப் பரீட்சையில் இறக்கிக்கொள்ள நேரிட்டது. எமக்கு எழுதுங்கள்; எம்மை விமர்சியுங்கள்...!' இதுவரை மூன்று இதழ்களே வெளிவந்த போதிலும் அதன் தாக்கமும் தாமதமும் ஒரு விழிப்புணர்ச்சியையே ஏற்படுத்தியிருக்கின்றது. இதில் இடம்பெற்ற சிறுகதைகளைப் படைப்பவர்கள் புதியவர்கள் மட்டுமல்ல; பெருமைக்குரியவர்களும் கூட. ஏனெனில் எதிர்காலத்தில் பேசப்படும் இலக்கிய வரலாற்றில் தீர்த்தக்கரைச் சிறுகதைகளுக்கு நிச்சயம் இடமுண்டு.

மலையக நாட்டார் பாடல்கள் — வாய்மொழியாக இருக்கும் இவை பிரசுர வடிவம் பெறுவது ஒரு எதிர்கால இலக்கியத் தேவையை நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கலாம். 'ஏட்டில் எழுதா இதயத்து ராகங்கள்' என்ற மகுடமே இத்தகைய உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இல்லையா?

தமிழியல் சம்பந்தமான நக்கீர விமர்சனங்கள் 'குருஷேத்திரம்' என்ற தலைப்பில் மூன்று இதழ்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. இத்தகைய விமர்சனங்கள் இலக்கியப் பிரவாகத்தில் சங்கமிக்க விரும்பும் இலக்கியகர்த்தாக்களுக்குள் போராட்ட உணர்வையேற்படுத்துமா?

இலக்கிய கங்கையாகப் பிரவாகம் கொள்ளத் தேக்கம் கொண்ட பல முயற்சிகளை வெறும் வாய்க்கால்களாக மாற்றிவிட்ட பெருமை நிதிப்பிரச்சனைக்குண்டு. இவ் வார்த்தைப் பிரயோகம் உங்களுக்குப் புரியவேயில்லையா?

✳

அச்சுப் பதிப்பு யாழ் நாயகி அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. O/L, A/L வகுப்புக்கள்

பாடங்கள்

பட்டதாரி ஆசிரியர்களால், விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றன
புதிய பாடத்திட்டத்திற்கேற்ப கணக்கியல், வணிகமும் நிதியும்,
பொருளியல், குறியீட்டு அளவையியல் பாடங்கள்
சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன

*K. G's. Institute*
No. 113 Point Pedro Road,
NALLUR,
JAFFNA.

அன்பளிப்பு

தரமான அலுமினியப் பொருட்கள்
உற்பத்தியாளர்கள்

சுப்பையா அரியராசாவும்,
சுப்பிரமணியம் பஞ்சலிங்கமும்.
கேரதீவு வீதி, நாவற்குழி, கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம் பலசரக்குச் சாமான்களும்
பால்மா வகைகளும் மற்றும்
சகலவிதமான சாமான்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் கிடைக்கும்

# சிவா றேடர்ஸ்

**No. 49, மார்கட்,**
**பருத்தித்துறை.**

விவசாயிகளே!
இதர வாகனச் சொந்தக்காரர்களே!
சகல விதமான போறிங் வேலைகளைத்
தரமாகவும் திருப்திகரமாகவும் செய்து
கொள்ளத் தவறாது நாட
வேண்டிய ஸ்தாபனம்

# ஸ்ரீ கணேசா போறிங் வேக்ஸ்

**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்கள்: ஐ. மனோகரன்
ஐ. குணரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TV BLOCK MAKING INDUSTRIES

**( UNDER NEW MANAGEMENT )**

* புளக்குகள் * றப்பர் ஸ்ராம்புகள் * விளம்பர சிலேட்கள்
* விளம்பரப் பலகைகள் * சகலவிதமான அச்சுவேலைகள்

* எந்த அளவிலும் * எந்த இடத்திலும் * மிகக் குறுகிய காலத்தில்
* சிறந்த முறையில் குறைந்த செலவில் தயாரித்துக் கொடுக்கப்படும் *

தொடர்பு கொள்ளுங்கள்

## ரீ. வி. புளக் மேக்கிங் இன்டஸ்றீஸ்

(புதிய நிர்வாகத்தின் கீழ்)

355 A கே. கே. எஸ். வீதி,
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

**355 A K. K, S. Road,**
(Upstairs)
**JAFFNA.**

---

NAYAKI PRINTERS

* சிறந்த முறையில்
* குறித்த தவணையில்
* குறைந்த செலவில்

## சிறந்த அச்சுவேலைகளுக்கு நாடுங்கள்!

# நாயகி அச்சகம்

**216, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

(ஒட்டுமடம் சந்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MASTER INSTITUTES

## B. M. C. LANE JAFFNA.

82 Apral 83 Apral பரீட்சைக்குத் தோற்றும்

மாணவர்களுக்கு

| | |
|---|---|
| விலங்கியல் | திரு சிவபாதம் |
| தாவரவியல் | திரு ரவிகுமார் |
| இரசாயனவியல் | திரு ஜெகன் |
| பௌதிகவியல் | திரு ஆரோக்கியம் |
| தூய கணிதம்<br>பிரயோக கணிதம். | திரு ரவிமோகன் |

✲ மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

✲ கடிகாரங்கள் வாங்கவும்

✲ சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும்

✲ நம்பிக்கையான ஸ்தாபனம்

✲ ✲ ✲ மணிக்கூடு திருத்துவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ✲ ✲ ✲

# ரதிவாச் வேர்க்ஸ்

**62A, 64, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**


noolaham.org | aavanaham.org